பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 18 சனிக்கிழமை 01.05.2021 கதிர் 45

## ஊரடங்கு உத்தரவு: போலிச் செய்தியாம்

### பொலிஸ் தெரிவிப்பு

நாட்டில் தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றுச் சூழலில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளது என வெளியாகும் செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

2

# வடக்கில் 15 கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரு பெண்கள் உள்ளிட்ட 5 பேர் பொலிஸாரிடம் சிக்கினர்

### 150 பவுண் தங்க நகைகளும் பெருமளவான தொலைபேசிகளும் மீட்பு





யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 15 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு பல மாதங்களாக தலைமறைவாகியிருந்த கும்பல் சிக்கியுள்ளது எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மூன்று மாவட்டங்களிலும் வீடு உடைத்து தொடர் திருட்டில்

2

# ‘கொரோனா’வின் தீவிரத்தையடுத்து பாடசாலைகளுக்கு விடுமுறை நீடிப்பு

### கல்வி அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

**கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள விடுமுறை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.**

**இந்தத் தகவலை கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இன்று அறிவித்தார்.**



2

## கொரோனாத் தொற்றுப் பேராபத்தால் இலங்கைக்குச் சிங்கப்பூர் கதவடைப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, இலங்கையின் பயணிகள் சிங்கப்பூருக்கு வருவது தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14 நாள்களுக்குள் இலங்கைக்குச் சென்ற பயணிகள் சிங்கப்பூர் வருவதையும் அந்த நாடு தடை செய்துள்ளது.

பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் பயணிகளுக்கும் சிங்கப்பூர் பயணத் தடை விதித்துள்ளது.

இன்று இரவு முதல் இந்தத் தடை அமுலுக்கு வருகின்றது என அந்த நாட்டு

2

## பரிசோதனை முடிவுகள் வெளிவருவதில் தாமதம்

### அதிகமான தொற்றாளர்கள் இருக்கலாம் என்கிறது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் தொடர்பான ஆய்வக அறிக்கைகளை வெளியிடுவதில் தாமதம் நிலவுகின்றது என இலங்கை பொதுச் சுகாதாரப்

2




## திரையரங்குகளுக்குப் பூட்டு!

### சிறுவர் பூங்காக்களும் மறு அறிவித்தல் வரை மூடல்

புதிய சுகாதார வழிகாட்டி வெளியிடப்படும் வரை நாட்டிலுள்ள அனைத்து திரையரங்குகள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் என்பவற்றை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று மிக வேகமாகப் பரவிவரும் சூழ்நிலையில், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றும் 1,304 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் இன்றும் மாலை 5 மணி வரைக்கும் 1,304 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனடிப்படையில் இலங்கையில் இதுவரையில்

2

## மரணச் சடங்கு தொடர்பில் அரசு விடுத்துள்ள அறிவிப்பு

கொழும்பு, மே 01

ஒருவர் மரணித்தால் 24 மணித்தியாலத்தில் குறித்த மரணச்சடங்கு நிறைவேற்றப்பட வேண்டும் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா அல்லாத மரணச் சடங்குகளே இவ்வாறு இடம்பெற வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மரணச் சடங்கொன்றில் ஒரே நேரத்தில் ஆகக் குறைந்தது 25 பேர் மாத்திரமே கலந்துகொள்ள முடியும் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளம் போன்ற நாடுகளின் பயணிகள் சிங்கப்பூரின் ஊடாக வேறு நாடுகளுக்கு பயணம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

## பரிசோதனை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மூன்று நாள்களுக்கு முன்பு நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளே தற்போது வெளியிடப்படுகின்றது என இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் கொரோனாப் பரவல் குறித்த உண்மையான நிலைவரத்தை அறிந்துகொள்ள முடியாதுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆய்வக அறிக்கைகளை வெளியிடுவதைவிரைவுபடுத்துவது முக்கியமானது எனச் சுட்டிக்காட்டிய அவர், தற்போது வெளியிடப்படும் தினசரி கொரோனாத் தொற்று எண்ணிக்கைகளை விட நாட்டில் அதிகமான தொற்றாளர்கள் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமையைக் கருத்தில்கொண்டு பொதுமக்கள் தேவையில்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும், பொது இடங்களில் மக்கள் நீண்ட நேரம் தரித்து நிற்க வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## இன்றும் 1,304 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 450 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் புத்தாண்டுக் கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

## 'கொரோனா'வின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளை எப்போது மீளத் திறப்பது என்பது தொடர்பில் எதிர்வரும் 7ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்படும் எனவும், அதுவரையில் நாளாந்தம் நிலைமை மீளாய்வு செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வடக்கில் 15 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு வந்தனர் என்ற குற்றச்சாட்டில் வடக்கின் பல பொலிஸ் நிலையங்களில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைக்கமைய ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து உருக்கப்பட்ட தங்கம், நகைகள் உட்பட்ட 150 பவுணுக்கும் அதிகமான தங்கம் மீட்கப்பட்டுள்ளதுடன் பெறுமதி வாய்ந்த பெருமளவான தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் என்றும், அவர்களில் பெண்கள் இருவரும் ஆண்கள் மூவரும் உள்ளடங்குகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெறப்பட்ட இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

கைதானவர்களை விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## ஊரடங்கு உத்தரவு: .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு, போலிச் செய்திகளைப் பரப்புவோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டுவருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழக முடிவு நாளை

தமிழகத்தில் ஆட்சியைப்பிடிக்கப் போகின்றவர் யார் என்பது பெரும்பாலும் நாளை மதியம் தெரிந்துவிடும்.

அங்கும் இந்தியாவின் பிற மாநிலங்கள் சிலவற்றிலும் நடைபெற்ற தேர்தல்களின் வாக்குகளை எண்ணும் பணி நாளை காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

காலை பத்து மணி அளவிலேயே வெற்றி வாய்ப்பின் போக்கு தென்படத் தொடங்கி விடும்.

சுமார் ஆறு கோடி இருபது லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்ற இந்தத் தேர்தலில் 72.8 வீதத்தினர் வாக்களித்திருந்தனர்.

மொத்தம் 234 தொகுதிகளில் 3 ஆயிரத்து 998 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிட்டனர். மொத்தம் 75 மையங்களில் நாளை வாக்குகள் எண்ணப்படவுள்ளன.

வாக்குகளை எண்ணும் பணிகளில் சுமார் 16 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதே நேரம் கட்சிகளின் முகவர்களும் பல்லாயிரம் பேர் வாக்கு எண்ணும் பணிகளைக் கண்காணிக்கவுள்ளனர்.

இந்த இரு தரப்பினருக்கும் – வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அரச ஊழியர்கள் மற்றும் கட்சிகளின் முகவர்கள் அனைவருக்கும் – கொரோனாப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கடந்த இரு நாள்களாக மேற்கொள்ளப்பட்ட இந்தச் சோதனைகளில் தொற்றுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டோர், தொற்றுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டோர் நாளைய வாக்கெண்ணும் பணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

எனினும், வாக்கெண்ணும் பணியுடன் சம்பந்தப்படுபவர்கள் அனைவரும், வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் முழு நேரமும் முகக்கவசம் அணிந்திருக்கும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு ஒன்றில், மோசமான கொவிட் தொற்று நெருக்கடிக்கு மத்தியில் இந்த ஜனநாயக நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றமையால் இது பெரும் சவாலுக்குரியதாக மாறியுள்ளது.

இந்த நடவடிக்கையின்போது கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தேர்தல் ஆணையம், இந்திய மத்திய – மாநில அரசுகள் மட்டுமன்றி இந்திய நீதிமன்றங்களும் இதில் தலையிட்டுள்ளன.

வாக்கெண்ணும் நிலையங்களில் மக்கள் கூடக் கூடாது. வெற்றிக் கொண்டாட்டங்கள், ஊர்வலங்களில் மக்கள் ஈடுபடக் கூடாது, வெடி கொளுத்தக் கூடாது என்பன போன்ற பல கட்டுப்பாடுகளை நீதிமன்றம் தானாகவே அறிவித்துள்ளது.

கட்சிகளின் தலைவர்களும் கூட அத்தகைய கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

“வெற்றிக் கொண்டாட்டங்கள் வீட்டுக்குள் நடக்கட்டும். வெளியில் வேண்டாம்” என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கோரியிருக்கின்றார்.

அவரே பெரும்பாலும் அடுத்த முதலமைச்சர் என்று பல தரப்புகளும் ஊகம் வெளியிட்டு வரும் நிலையில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்.

தமிழக தேர்தலைப் பொறுத்தவரை ஐம்முனைப் போட்டி என்று கூறப்பட்டாலும், உண்மையில் நேரடிப் போட்டி என்னவோ அ.தி.மு.க. – பாரதீய ஜனநாயக கட்சி கூட்டணிக்கும் தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணிக்கும் இடையில்தான்.

தமிழகத்தை கடந்த பத்து ஆண்டுகளாக அ.தி.மு.கழகம்தான் ஆட்சி புரிந்து வருகின்றது.

எனினும் அங்கு பிரதான கட்சிகளின் மூத்த தலைவர்களான அ.தி.மு.க. தலைவி செல்வி ஜெயலலிதா மற்றும் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி ஆகிய இருவரும் இல்லாமல் அந்த மாநிலம் காணும் முதல் தேர்தல் இது.

மொத்தம் இருநூற்றி முப்பது நான்கு தொகுதிகளில் 165 முதல் 170 வரையான ஆசனங்களை மு.க. ஸ்டாலின் தலைமையிலான தி.மு.கழக கூட்டணியே வெல்லும் என்றும் பல ஊடகங்கள், தரப்புகள் நடத்திய கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. எனினும் அ.தி.மு.க. ஆதரவு ஊடகங்கள் அ.தி.மு.கவுக்கு இம்முறையும் அறுதிப் பெரும்பான்மையான 118 இடங்கள் கிடைப்பது உறுதி என அறுதியிட்டுக் கூறுகின்றன.

இன்று இருபது முதல் 44 வரையான சுற்றுக்கள் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பதால் –

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி என்றாலும் கூட –

நாளை நள்ளிரவு வரை கூட வாக்கு எண்ணிக்கை நடவடிக்கை தொடரக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

ஆனாலும், தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கப் போகின்றவர் யார், அடுத்த முதலமைச்சர் ஸ்டாலினா அல்லது எடப்பாடி பழனிச்சாமியா என்ற கேள்விகளுக்கு எல்லாம் பெரும்பாலும் நாளை மதியத்துக்குள் ஓரளவுக்கு விடை தெரிந்து விடும்.

இந்தியாவில் ஒரே நாளில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4 லட்சத்தையும் தாண்டியுள்ள நிலையில் தென் மாநிலம் தனது ஜனநாயகக் கடமையில் முக்கிய நடவடிக்கையை நாளை முன்னெடுக்கின்றது.

## மத்தியவங்கி 2020 வருடாந்த அறிக்கை பிரதமர் மஹிந்தவிடம் வழங்கி வைப்பு



இலங்கை மத்திய வங்கியின் 71ஆவது வருடாந்த அறிக்கை, மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டப்ளிவ்.டீ.லக்ஷ்மனால் நேற்று (வெள்ளிக்கிழமை) அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கிவைக்கப்பட்டது.

நாணய விதிச் சட்டத்திற்கமைய மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, ஆண்டுதோறும் ஏப்ரல் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக நிதி அமைச்சருக்கு வழங்கி வைக்கப்பட வேண்டும்.

அதற்கமைய மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, நிதியமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டில் இலங்கை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பெற்றுக்கொண்ட பொருளாதார முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் அரச கொள்கை கட்டமைப்பிற்குள் இலங்கை பொருளாதாரத்தின் போக்குத் தொடர்பான கணிப்பும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர் டப்ளிவ்.டீ.லக்ஷ்மன், துணை ஆளுநர் மஹிந்த சிறிவர்தன, பொருளாதார ஆராய்ச்சி பணிப்பாளர் சந்திரநாத் அமரசேகர உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணம்: மட்டுப்படுத்தப்பட்ட நாடாளுமன்ற அமர்வுகள்

நாடாளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் மே 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் மாத்திரம் நடத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று(வெள்ளிக்கிழமை) சபாநாயகர் மஹிந்த யாப்ப அபேவர்தன தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொவிட் – 19 சவாலை எதிர்கொண்டு, நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஒத்திவைப்பு விவாதம் மே 4 ஆம் திகதி மதியம் ஒரு மணிக்கு நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணையகத்தின் சட்டமூலம், இந்த மாதம் 5 ஆம் திகதி தாக்கல் செய்யப்படும். காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை முழு நாளிலும் விவாதத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என நாடாளுமன்றத்தின் பொதுச்செயலாளர் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த இரு நாள்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்வழி கேள்விகளுக்கும், நிலையான ஆணை 27 (2) இன் கீழ் உள்ள கேள்விகளுக்கும் நேரமில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 2 மீற்றர் தூர இடைவெளியை கடைப்பிடிக்க அறிவுறுத்தல்

விடுத்தது மருத்துவர் சங்கம்



கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் சடுதியாக அதிகரித்து வருகின்றமையால் இரண்டு பேருக்கு இடையிலான தூரம் தொடர்பான பரிந்துரையை மாற்ற வேண்டுமென இலங்கை மருத்துவ சங்கத்தின்தலைவர் வைத்தியர் பத்ம குணரத்ன தெரிவித்துள்ளார்.

அதாவது மருத்துவ நிபுணர்களின் புதிய பரிந்துரை, இரண்டு நபர்களிடையே குறைந்தது இரண்டு மீற்றர் தூரத்தை வைத்திருக்க வேண்டும் என்பதாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## களுத்துறை சிறைச்சாலையில் 32 கைதிகளுக்கு கொரோனா

களுத்துறை – ஜாவத்த சிறைச்சாலையிலுள்ள 32 கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறைச்சாலையில் 40 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அதிலேயே குறித்த 32 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அந்தச் சிறைச்சாலையின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களை, சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் மற் றுமொரு சிகிச்சை நிலையத்துக்கு மாற்று வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா பாதித்த 3 கர்ப்பிணிகள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு

கொரோனாவைரஸ்தொற்றால்ஆபத்தான நிலைமைக்கு உள்ளாகியுள்ள கர்ப்பிணிப் பெண்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளமையால் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டுமென மகப்பேறியல் மற்றும் மகப்பேற்று மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மூன்று கர்ப்பிணித் தாய்மார்கள், தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அதன் தலைவர் டாக்டர் பிரதீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் கொழும்பு கிழக்கு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் கர்ப்பிணித் தாய், ஆபத்தான நிலையில் உள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இத்தகைய சூழ்நிலையில் தாய்மார்கள், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும் எனவும் பிரதீப் டி சில்வா கூறியுள்ளார்.

அந்தவகையில் குறிப்பாக அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றின் பாதிப்பு அதிகளவு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே உடல் பருமன், நீரிழிவு நோய் அல்லது உயர் இரத்த அழுத்தம் உள்ள தாய்மார்கள், இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வேலை செய்யும் பொது இடங்களிலிருந்து விலகி இருப்பதும் மிகவும் முக்கியம் என பிரதீப் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கர்ப்பிணிப் பெண்களுக்கு கொவிட் – 19 தடுப்பூசி பொருத்தமானது என்று மகப்பேறியல் நிபுணர்கள் மற்றும் மகப்பேறு மருத்துவர்கள் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா மரணங்களுக்கு மத்திய அரசு ஏன் பொறுப்பேற்கவில்லை? – ராகுல் கேள்வி

‘இந்தியாவில் கொரோனா உயிரிழப்புகள் இரண்டு லட்சத்தை தாண்டியுள்ள நிலையில் இதற்கு மத்திய அரசு எவ்வித பொறுப்பும் ஏற்கவில்லை!’ என ராகுல் காந்தி விமர்சனம் செய்துள்ளார்.

இந்தியாவில் கொரோனா இரண்டாம் அலையின் தீவிரம் உச்சத்தை தொட்டு வருகிறது. இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு 3,523 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம், நாட்டின் மொத்த உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,11,853 ஆக உயர்ந்துள்ளது. உலகளவில் கொரோனா மரணங்களில் அமெரிக்கா முதல் இடத்திலும், இந்தியா 2 ஆம் இடத்திலும், பிரேஸில் 3 ஆம் இடத்திலும், பிரான்ஸ் 4 ஆம் இடத்திலும், துருக்கி 5 ஆம் இடத்திலும் உள்ளன.

‘இந்தியாவில் கொரோனாவுக்கு பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 11 ஆயிரத்தை கடந்துள்ளது. இந்நிலையில் கொரோனா மரணங்களுக்கு மத்திய அரசு ஏன் பொறுப்பேற்கவில்லை?’ என ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார். இதுகுறித்து டுவிட்டர் பதிவை வெளியிட்டுள்ள அவர், ‘கொரோனா உயிரிழப்புகள் 2 லட்சத்தை கடந்துள்ள நிலையில், இதற்கு மத்திய அரசு எவ்வித பொறுப்பும் ஏற்கவில்லை!’ என்று தெரிவித்துள்ளார்.



‘சிகிச்சைப் பற்றாக்குறையால் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து வரும் நாட்டு மக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல். இந்த துயரகரமான சூழ்நிலையில் நீங்கள் தனியாக இல்லை. நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பிரார்த்தனைகளும் அனுதாபங்களும் உங்களுடன் உள்ளன. நாம் ஒன்றாக இருந்தால் நம்பிக்கை நிலைக்கும்!’ என்றும் ராகுல்காந்தி குறிப்பிட்டுள்ளார்.

# கைதிகள் உறவினர்களோடு காணொலி உரையாடல் கேரள சிறைகளில் புதிய வசதி

கேரளாவில் சிறைக் கைதிகள் தங்கள் குடும்பத்தினருடன் காணொலி மூலம் பேசும் வசதி செய்யப்பட்டுள்ளது.

கேரள சிறைகளில் கைதிகளுக்கும் கொரோனா பரவி வருகிறது. இதனால், சிறைகளில் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக, கைதிகளை அவர்களின் குடும்பத்தினர் குறிப்பிட்ட நாள்களில் சிறைக்குச் சென்று சந்திப்பது வழக்கம். தற்போது, கொரோனா அதிகரித்து வருவதால் இந்த வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமற்போயிருக்கிறது.

இதையடுத்து, கைதிகள் காணொலி மூலம் உறவினர்களுடன் பேச ஏற்பாடுகளைச் செய்ய கேரள சிறைத்துறை தீர்மானித்தது. இதற்காக, மத்திய உள்துறை அனுமதியுடன் புதிய மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி கைதிகள் தங்கள் குடும்பத்தினருடன் காணொலி மூலம் பேசிக்கொள்ளலாம்.



முதற்கட்டமாக, வாட்ஸ் அப் மூலம் 3 மாதங்களுக்கு பரிசோதனை அடிப்படையில் இந்த வசதி பரிசோதிக்கப்பட்டது. இது வெற்றிகரமாக அமைந்ததைத் தொடர்ந்து, கைதிகள் காணொலி மூலம் தங்கள் குடும்பத்தினருடன் பேசும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, ‘இ – பிரிசன்ஸ் போர்ட்டல்’ என்ற மென்பொருள் பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் 2 வாரங்களுக்கு ஒருமுறை 5 நிமிடங்கள் கைதிகள் தங்கள் உறவினர்களுடன் பேசிக்கொள்ளலாம். கேரளாவில் 3 மத்திய சிறைகள் உட்பட 53 சிறைகளில் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 75 மையங்களில் நாளை வாக்கு எண்ணிக்கை

தமிழகத்தில் தற்போதைய சட்டப்பேரவையின் பதவிக் காலம் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிகிறது. இதையொட்டி தமிழகத்தில் மொத்தமுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளுக்குமான தேர்தலும், கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி ஒரே கட்டமாக நடைபெற்றது.

தமிழகத்தில் தி.மு.க. தலைமையில் ஒரு கூட்டணி, அ.தி.மு.க. தலைமையில் ஒரு கூட்டணி மற்றும் மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர் கட்சி, அ.ம.மு.க. உள்ளிட்ட 5 கட்சிகள் சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தன. அதன்படி தமிழகத்தில் மொத்தமுள்ள 234 தொகுதியிலும் 3,998 வேட்பாளர்கள் களத்தில் நின்றனர். தமிழகத்தில் 6 கோடியே 28 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி உள்ளவர்களாக இருந்தனர் ஆயினும் 4 கோடியே 57 லட்சத்து 76 ஆயிரத்து 311 பேர் மட்டுமே வாக்களித்தனர்.

வாக்குப்பதிவு முடிந்ததும், 88,937 வாக்குப்பதிவு மையங்களில் வாக்குகள் பதிவான மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீல் வைக்கப்பட்டு, துணை இராணுவ வீரர்கள் பாதுகாப்புடன் அந்தந்த மாவட்டத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

மேற்கு வங்கத்திலும் கட்டம் கட்டமாக நடைபெற்ற தேர்தல் நிறைவு பெற்றுவிட்டதால், அனைத்து மாநிலங்களிலும் பதிவான வாக்குகள் எண்ணப்படவுள்ளன. தமிழகத்தில் நாளை காலை 8 மணிக்கு மொத்தமுள்ள 75 மையங்களில் வாக்குகள் எண்ணப்படுகிறது.

நாளை காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியதும், முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படும். தொடர்ந்து காலை 8.30 இற்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணிகள் தொடங்கும். ஒவ்வொரு தொகுதியிலும் எந்த வேட்பாளர் முன்னணியில் உள்ளார் என்ற விவரம் நாளை காலை 9 மணி முதல் தெரியவரும். வாக்கு எண்ணும் பணியில் மட்டும் 16,387 பேர் ஈடுபடுகிறார்கள்.

கொரோனாத் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்கள், கண்காணிப்பாளர்களான வேட்பாளர்கள், அரசியல் முகவர்கள், பத்திரிகையாளர்கள் என அனைவரும் 2 கட்ட தடுப்பூசி போட்டதற்கான சான்றிதழ் அல்லது கொரோனாப் பரிசோதனை செய்ததற்கான சான்றிதழ் இருந்தால் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். அவர்களும் உடல்வெப்ப நிலை பரிசோதனையில் 98.5 பாகைக்கு குறைவாக இருந்தால் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை முடிந்த பிறகும் கூட பட்டாசு வெடித்தல் உள்ளிட்ட அனைத்து வெற்றிக்கொண்டாட்டங்களுக்கும் தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய அரசின் பேரிடர் நிவாரண நிதி முதல் தவணையாக 8,873 கோடி ரூபா மாநிலங்களுக்கு வழங்கப்பட்டது!

மத்திய அரசின் பேரிடர் நிவாரண நிதியில், முதல் தவணையாக 8,873 கோடி ரூபா மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வழக்கமாக இந்த தொகை ஜூலை மாதத்தில் வழங்கப்பட வேண்டும். ஆனால் கொரோனா தொற்று பரவல் நெருக்கடி காலத்தை கருத்தில் கொண்டு பேரிடர் நிவாரண நிதியின் முதல் தவணையை விடுவிக்கும்படி மத்திய நிதி அமைச்சகம் கேட்டுக் கொண்டதையடுத்து, உள்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்து முதல் தவணை நிதியை வழங்கியுள்ளது. இந்த நிதியின் 50 சதவீத தொகையை கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு மாநில அரசுகள் பயன்படுத்தலாம்.

கடந்த நிதி ஆண்டில் இந்த நிதி பயன்படுத்தியதற்கான சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரே, பேரிடர் நிவாரண நிதிக்கான அடுத்த தவணை வழங்கப்படும். ஆனால் இம்முறை அதற்காக காத்திருக்காமல் உடனடியாக முதல் தவணை வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கொரோனாவை கட்டுப்படுத்த, மருந்துகள் வாங்க, ஒக்சிஜன் பற்றாக் குறையை தீர்க்க, மருத்துவமனை சுற்றுச்சூழலை மேம்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு மாநில அரசுகள் பேரிடர் நிவாரண நிதியின் முதல் தவணைத் தொகையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா தடுப்பூசிக்கு விலை நிர்ணயம் செய்ய தயாரிப்பு நிறுவனங்களை அனுமதிக்கக் கூடாது

## மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

‘கொரோனாத் தடுப்பூசியின் விலையை அதன் தயாரிப்பு நிறுவனங்கள் நிர்ணயம் செய்யக் கூடாது’ என நேற்று உத்தரவைப் பிறப்பித்த உச்ச நீதிமன்றம், ‘இருக்கும் சூழலைக் கருத்தில் கொண்டு கூடுதலாக தடுப்பூசிகளை உருவாக்க வேண்டும்’ எனவும் மத்திய அரசை வலியுறுத்தி உள்ளது.

கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலையால் நாடு முழுவதும் பாதிப்பு கடுமையாக உள்ளது. பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு மருத்துவமனைகளில் ஒக்சிஜன் மற்றும் மருந்துகள் போதியளவில் கிடைக்காமல் போவது பற்றிய செய்திகள் மக்களிடம் பீதியை ஏற்படுத்திவருகின்றன. இந்தப் பிரச்சினைகள் குறித்து பல்வேறு மாநில உயர் நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணைகள் நிலுவையில் உள்ளன.

இந்நிலையில், இவை தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்து விரைவாக உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறது. தடுப்பூசிகளுக்கான விலை நிர்ணயம் தொடர்பான வழக்கு ஒன்றின் விசாரணை நேற்று நடைபெற்ற பின்னர் நீதிபதிகள் தமது தீர்ப்பிலே பல விடயங்களைக் குறிப்பிட்டுள்ளனர்.

‘தற்போது சந்தித்து வரும் இடர்பாடு ஒரு தேசியப் பிரச்சினையாகும். இதைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், தடுப்பூசி உரிமம் பெறுவதற்கு காப்புரிமைச் சட்டத்தின் 92 ஆவது சட்டத்தின் கீழ் அதிகாரங்களைப் பயன்படுத்துவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டதா? என்று தெரிய வேண்டும். தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்து அரசு தரப்பில் என்ன திட்டங்கள் உள்ளன என்பதையும் நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும்!’ என்று நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

அதேபோல், ‘மாநிலங்களே தடுப்பூசியை நேரடியாக கொள்முதல் செய்யும்போது ஏழை, வசதிபடைத்தவர்கள் என்ற பாரபட்சம் இல்லாமல் அனைவருக்கும் சமமாக கிடைப்பது பற்றியும் உறுதி செய்ய வேண்டும். புதிய வகை கொரோனா பாதிப்பு குறித்து ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனை மூலம் கண்டறிய முடியுமா? அல்லது அதற்கு ஏதேனும் வேறு விதமான வழிமுறைகள் உள்ளதா? என ஆய்வு செய்ய வேண்டும்!’ என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

‘கொரோனா நோயாளிகளை கண்டறிந்து மருத்துவமனையில் சேர்ப்பதற்கான நடைமுறை தற்போது வரை எப்படி செயல்படுத்தப்படுகிறது? அதற்காக மத்திய அரசு வைத்துள்ள திட்டம் என்ன? மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்களுக்கான பாதுகாப்பு என்ன? ஊழியர்கள் பற்றாக்குறையை எப்படி சமாளிக்க போகிறீர்கள்? இப்போது இருப்பதை விட மேலும் பரிசோதனையை அதிகரிப்பது எப்படி? அதற்கான நடவடிக்கைகள் என்ன? அதேபோன்று புதிய வகை கொரோனாவைக் கண்டறிய என்ன விதமான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருகிறீர்கள்?’ என்று பல கேள்விகளையும் அரசதரப்புக்கு முன்வைத்துள்ளனர்.

‘கொரோனாத் தடுப்பூசி விவகாரம் அனைத்தும் மத்திய அரசின் வசம் தான் இருக்க வேண்டும். இந்த விவகாரத்தில் தேசிய அளவிலான தடுப்பு திட்டத்தை செயல்படுத்த முன்வர வேண்டும். நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் பாகுபாடு இல்லாமல் இலவசமாக தடுப்பூசி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.’

‘மேலும், தடுப்பூசி தயாரிப்பு நிறுவனங்கள் கருணை அடிப்படையில் அதனை விநியோகம் செய்வதை நிறுத்தி, அதனை மத்திய அரசு மேற்கொள்ள முன்வர வேண்டும். தடுப்பூசி விநியோக திட்டத்தின் கட்டுப்பாடு மத்திய அரசின் கையில் இருக்க வேண்டுமே தவிர இதில் மூன்றாம் நபர் தலையீடு இருக்கக் கூடாது. அதேபோல், கொரோனாத் தடுப்பூசிக்கான விலையை தயாரிப்பு நிறுவனங்கள் மேற்கொள்வதோ அல்லது அதனை நிர்ணயம் செய்வதையோ அனுமதிக்க முடியாது. ஏனெனில், தனியார் நிறுவனங்கள் இதனை மேற்கொள்ளும் போது அதில் சமநிலைத் தன்மை இருக்கும் என்பதை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும். அதில் சாத்தியமே இல்லை’ என்றும் நீதிபதிகள் அழுத்தமாகக் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் நாடுகளுக்கு இடையே பயங்கர மோதல்; 31 பேர் சாவு

ஒருங்கிணைந்த சோவியத் யூனியன் பிளவடைந்த பின்னர் 1991 ஆம் ஆண்டு கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய இரு நாடுகள் சுதந்திரம் பெற்றன. மத்திய ஆசியாவில் அமைந்துள்ள இந்த இரு நாடுகளுக்கும் இடையே ஓடும் ஆறு தொடர்பாக பல ஆண்டுகளாக பிரச்சினை நிலவி வந்தது. மேலும், இரு நாடுகளுக்கு இடையேயும் எல்லைப் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் இருந்து வந்தது.

இதற்கிடையே, நீர்நிலையில் கண்காணிப்பு கமரா அமைப்பது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே கடந்த சில நாள்களுக்கு முன்னர் சண்டை ஏற்பட்டது. அந்த சண்டை தற்போது இரு நாடுகளுக்கு இடையேயான எல்லைப் பிரச்சினைக்கு வழிவகுத்தது.

இந்நிலையில், இரு நாடுகளை சேர்ந்த வீரர்களும் மோதலில் ஈடுபட்டனர். சர்ச்சைக்குரிய கிர்கிஸ்தான் நாட்டின் பேட்கன் பகுதியில் இன்று மோதல் வெடித்தது.



இரு நாடுகளின் வீரர்களும் ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் நடத்தினர். துப்பாக்கிச்சூடு தாக்குதல்களும் அரங்கேறியன. இந்த மோதலில் 31 பேர் உயிரிழந்துள்ளனர்

கிர்கிஸ்தான் சுகாதாரத் துறை மந்திரி தெரிவித்துள்ளார். மேலும், 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்த மோதலில் தஜிகிஸ்தான் நாட்டில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து தகவல் தெரிவிக்கப்படவில்லை. இரு நாடுகளுக்கு இடையிலான இந்த மோதலை தொடர்ந்து எல்லையில் வசித்துவந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பான இடம் நோக்கி இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

இரு நாட்டு எல்லையின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடைபெற்று வருகிறது. இந்த மோதல் போருக்கு வழிவகுக்காமல் தடுக்கும் வகையில் இரு நாடுகளும் பேச்சுக்களில்ல் ஈடுபட முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

## ஐரோப்பாவில் 12 வயதினருக்கு தடுப்பூசி? அனுமதி கோருக்கிறது பைஸர் நிறுவனம்



அமெரிக்காவைச் சேர்ந்த பன்னாட்டு மருந்து நிறுவனமான பைஸரும், ஜேர்மனியை சேர்ந்த பயோஎன்டெக் நிறுவனமும் இணைந்து கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கி உள்ளன.

இந்த நிறுவனங்களின் தடுப்பூசி ஐரோப்பா கண்டத்தில் உள்ள 27 நாடுகளில் 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு செலுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஐரோப்பாவில் தங்களது தடுப்பூசியை 12 முதல் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் பயன்படுத்த ஒப்புதல் அளிக்குமாறு ஐரோப்பிய மருந்து நிறுவனத்திடம் பைஸர் நிறுவனமும், பயோஎன்டெக் நிறுவனமும் இணைந்து விண்ணப்பித்துள்ளன.

இதுபோல், அமெரிக்காவிலும் இதே வயதுடையவர்களுக்கு தங்கள் தடுப்பூசியைப் பயன்படுத்த அமெரிக்க உணவு மற்றும் மருந்து அமைப்பிடம் 'பைஸர்' நிறுவனம் ஏற்கனவே விண்ணப்பித்துள்ளது.

இந்தியாவை பொறுத்தவரை, 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே முதல் முறையாக இன்றுதான் (சனிக்கிழமை) தடுப்பூசி போடப்படுகிறது. ஐரோப்பாவில் 16 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஏற்கனவே போடப்பட்டு வருகிறது.

ஒருவேளை 'பைஸர்' நிறுவனத்தின் கோரிக்கை ஏற்கப்பட்டால், 12 வயது சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்படுவது உலக அளவில் இதுவே முதல் முறையாக இருக்கும்.

## கொரோனாவால் பாதிப்படைந்தோர் 15.19 கோடியாக உயர்வடைந்தது

உலகம் முழுவதும் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்நிலையில் தற்போதைய நிலைவரப்படி, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 15 கோடியே 19 லட்சத்தை தாண்டி உள்ளது.

கொரோனாப் பாதிப்பில் இருந்து இதுவரை 12 கோடியே 92 லட்சத்திக்கு அதிகமானோர் குணமடைந்துள்ளனர். மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 31 லட்சத்து 93 ஆயிரத்து 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்கு தற்போது 1 கோடியே 95 லச்சம் பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 1 லச்சத்து 11 ஆயிரத்து 361 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனத் தரவுகள் தெரிவிக்கின்றன.

## உழைப்பை மதித்திடுவோம் ஓரணியாய் வாருங்கள்!

ஊசிமுதல் உணவுவரை உழைப்பாலே வருகிறது
உழைக்கின்றார் வாழ்வெல்லாம் உயர்வுபெற மறுக்கிறது
காசுள்ளார் கைகளிலே உழைப்பெல்லாம் போகிறது
கவலையுறும் உழைப்பாளி கண்ணீரில் மிதக்கின்றான்!

சமத்துவங்கள் பேசுகிறார் சங்கங்கள் அமைக்கின்றார்
நினைத்தவுடன் மாநாடு நிறையவே வைக்கின்றார்
அனைத்துமே உழைக்கின்றார் அனுசரணை என்கின்றார்
ஆனாலும் உழைக்கின்றார் அல்லலிலே இருக்கின்றார்!

வியர்வையிலே தொழிலாளி வேதனையில் தொழிலாளி
நலமிழந்து கிடக்கின்றான் நயமெதுவும் காணவில்லை
முதலீட்டும் முதலாளி தலைநிமிர்ந்து நிற்கின்றான்
முழுதுழைக்கும் தொழிலாளி நிலையிழந்து தவிக்கின்றான் !

பணமெண்ணும் மனமகன்று மனமெண்ணும் நிலைவேண்டும்
உழைப்பதனை உயர்வென்று உணர்த்தியே விடவேண்டும்
உழைத்திடுவார் இருப்பிடங்கள் உயரவெண்ணும் உளம்வேண்டும்
உழைப்பாளி முதலாளி ஓரணியாய் வரவேண்டும்!

வளமாக வாழ்வதற்கு வழிசமைக்கும் தொழிலாளி
நிலமீது நிம்மதியாய் தலைநிமிர வழிவேண்டும்
வளமீட்டும் முதலாளி மனமகிழ வைத்துவிடும்
வாழ்வளிக்கும் தொழிலாளி வாழும்நாள் வரவேண்டும்!

உழைக்கும் கைகளென்றும் உயர்வினைப் பெறவேண்டும்
உழைப்பினை மதித்திடும் உளமது எழவேண்டும்
உழைப்பினால் உலகமே உயர்ந்திடும் தன்மையால்
உழைப்பவர் நலத்தினை உயர்த்தியே போற்றுவோம்!

உழைப்பை மதிக்கும்நாள் உன்னதமே உலகினுக்கு
உழைப்பை மதிக்கும்நாள் உயர்வினையே உணர்த்திவிடும்
உழைப்பை மதிக்கும்நாள் உழைப்பாளர் மகிழ்ந்திடுவார்
உழைப்பை மதித்திடுவோம்ஓரணியாய் வாருங்கள் !

கவிஞர் மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்
மெல்பேண் ... ஆஸ்திரேலியா

## இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா பிரான்ஸுக்கும் பரவியது

இந்தியாவில் உருமாறிய கொரோனா வைரஸ் தொற்று உருவாகி உள்ளது. 'பி.1.617' அல்லது இரட்டை பிறழ்வு திரிபு வைரஸ் என அழைக்கப்படுகிற இந்த வைரஸ், மராட்டிய மாநிலத்தில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட மாதிரிகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவல் வேகம் எடுப்பதற்கு இந்த வைரஸ் காரணமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த வைரஸ் பரவல் 17 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது என உலக சுகாதார நிறுவனம் அண்மையில் கூறியது.

இந்த நிலையில், ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸிலும் இந்தியாவில் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா பரவியிருக்கின்றது என அந்நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தியாவுக்கு பயணம் மேற் கொண்ட பெண் ஒருவருக்குப் புதிய வகை கொரோனாப் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட் டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவின் மருத்துவ உதவி விமானம் நேற்றைய தினம் டெல்லியை வந்தடைந்தது

கொரோனாவிடம் சிக்கித் தவித்து வரும் இந்தியாவுக்கு நாற்பதுக்கும் மேற்பட்ட உலக நாடுகள் உதவி செய்ய முன்வந்துள்ளன. அவ்வாறான ஒரு தொகுதி அமெரிக்கா அனுப்பிய மருத்துவப் பொருள்களை ஏற்றிய விமானம் நேற்று வந்து சேர்ந்தது.

ரஷ்யா நேற்று முன்தினம் இரு விமானங்களில் ஒக்சிஜன் செறிவூட்டிகள், வென்டிலேட்டர்கள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களையும் மருந்துகளையும் அனுப்பி வைத்திருந்தன. இந்நிலையில், பல்வேறு மருத்துவ உதவிப் பொருள்களைத் தாங்கிய அமெரிக்காவின் தனி விமானம் நேற்று டெல்லியை வந்தடைந்தது. இந்த விமானத்தில், 400 ஒக்சிஜன் சிலிண்டர்கள், கொரோனா பரிசோதனைக் கருவிகள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்டவை அனுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'அமெரிக்காவால் அவசர கால மருத்துவப் பொருள்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. இருநாடுகளுக்கும் இடையிலான 70 ஆண்டு கால ஒத்துழைப்பை வலுப்படுத்த, கொரோனாவுக்கு எதிராக போராடும் இந்தியாவுக்கு அமெரிக்கா துணை நிற்கும்' என கூறப்பட்டுள்ளது.



அமெரிக்க நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் நன்கொடையாக அளித்த மருத்துவப் பொருள்கள், உபகரணங்களை ஏற்றிய சிறப்பு விமானம் அடுத்த வாரம் இந்தியா வரும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கருத்துத்தான் முன்னாள் அமைச்சர் ரிஷாத்தை கைதுசெய்யத் தூண்டியது

## நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவிப்பு



(பைல் இஸ்மாயில்)

பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கருத்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீது சந்தேகம் கொள்ளும் வகையிலான சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அவருடைய அந்தக் கருத்துக்களுக்குப் பின்னால் தான் இந்தக் கைதும் இடம்பெற்றது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

ரஞ்சித் மல்கம் ஆண்டகையின் கருத்துக்குப் பின்னர் அவரை திருப்திப்படுத்தும் நோக்கிலேயே ரிஷாத் பதியுதீனின் கைது இடம்பெற்றதாக மக்கள் மத்தியில் பேசப்படுகின்றதே இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன? என்று ஊடகவியலாளரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதிக்குள் தாக்குதல் தொடர்பான சூத்திரதாரிகள் கண்டு பிடிக்கப்படாவிட்டால் நான் சர்வதேசம் எங்கும் சென்று சர்வதேசத்தின் உதவியை நாடுவேன் என்று ஏற்கனவே அரசை எச்சரித்திருந்தார்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் எமது கட்சியின் தலைவரைப் பற்றி அவர் கூறிய குற்றச்சாட்டுக்கள் என்பவை தொடர்பாக அவரை சாந்தப்படுத்தும் விதமாக இந்தக் கைது இடம்பெற்றிருக்கலாம் என்ற நம்பிக்கைதான் பலர் மத்தியிலும் வந்திருக்கின்றது. பல கட்சிக்காரர்கள் பத்திரிக்கையாளர்கள் கூட இதனைச் சுட்டிக்காட்டுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

உண்மையில் ஒரு மார்க்கத்தினுடைய உயர்ந்த நிலையில் இருக்கின்ற மார்க்கப் போதகர் அவர், அவர் இவ்வாறு அடிப்படையற்ற விதத்தில் ஒருவரை அவருடைய பெயரை சுட்டிக்காட்டி சந்தேகிக்கும் விதமாக கருத்துரைப்பது என்பது நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாகும்.

100 குற்றவாளிகள் தப்பிக்கலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது. தலைவர் ரிஷாத் பதியுதீனுக்கு இப்போது கிடைத்திருக்கும் தண்டனை அவருடைய கைது அவர் சிறை வாசம் அனுபவிக்கின்ற விடயம் அல்லது இதற்கு பின்னரான நிலைகள் என இவ்வாறான இந்த நிலைக்கு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தான் பொறுப்புக்கூற வேண்டும்.

உண்மையில் ஒரு நிரபராதியாக இருக்கும் எமது தலைவர் பாதிக்கப்படுவாராக இருந்தால் அந்தப் பாதிப்புக்கான முழுப்பொறுப்பையும் அந்தப் பாவத்துக்கான பொறுப்பையும் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஏற்க வேண்டும் என்றார்.

# கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வீடுகள் கையளிப்பும் குடிபுகுதலும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி இல்லாத நிலையில் வாழும் குடும்பங்களுக்கு புது வருட தினமன்று கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எத்தலை மேட்டுக்காடுஎனும் இடத்தில் வைபவரீதியாக பயனாளிகளுக்கு காணி உறுதி ஆவணம் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

உறுதி ஆவணங்களைப் பெற்றுக் கொண்டோர் தங்களுக்கு சொந்தமான காணியில் குடிசை வீடுகளை அமைத்து குடியிருக்கும் நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

கிரானிலுள்ள சமூக ஆர்வலரான குருசுமுத்து வி.லவக்குமார் என்பவரே தமக்குச் சொந்தமான சுமார் 15 ஏக்கர் காணியினை 224 பேருக்கு இலவசமாக வழங்கி வைத்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் வறுமை நிலையில் வாழும்,வாடகை வீட்டில் உள்ளோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் கணவனை இழந்தோர் என அடையாளம் காணப்பட்டு அவர்களின் எதிர்கால வாழ்வு கருதி இக் காணி பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

பயனாளிகளின் பிள்ளைகளின் கல்வி, மேம்பாடு,



பொருளாதார விருத்தி கருதி இவ் நடவடிக்கையை முன்னெடுத்ததாக நன்கொடையாளர் வி.மார் தெரிவித்தார்.

இதில் பொது தேவைகளான மத ஆலயம், பாடசாலை, போன்றவற்றிற்கும் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அத்துடன் குடியிருப்பாளர்களின் எதிர்கால தேவை, வாழ்வாதாரத்தினை நிவர்த்தி செய்ய சிறுதோட்டப் பயிர் செய்கை நடவடிக்கைக்காக குத்தகை அடிப்படையில் மேலும் 15 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வல்லரசுகளின் விளையாட்டுக்களமாக இலங்கையை மாற்றியிருக்கிறது அரசு

## இம்ரான் எம்.பி கவலை



(பைல் இஸ்மாயில்)

கடந்த காலங்களில் இருந்த அரசுகள் பேணிய நடுநிலைத் தன்மைக்குப் புறம்பாக இந்த அரசு எம்நாட்டை வல்லரசுகளின் விளையாட்டுக்களமாக மாற்றியிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், எமது நாட்டை சீனாவின் கடன் பொறிக்குள்ளும் தள்ளியிருக்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அத்தோடு சீனாவின் பொறிக்குள் சிக்கிவிடக்கூடாது என்று சில நாடுகள் எம் நாட்டை உதாரணம் காட்டி பேசும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்றும் அவரின் வருகையின் பின்னணியில் எம் நாடு முழுமையாக சீனாவின் சொத்தாக மாறியிருக்கிறது என்பதற்கான அடையாள விஜயம் தான் இந்த விஜயம் என்று எனக்குத் தோன்றுகிறது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவரது கிண்ணியா காரியாலயத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது சீன தேசியப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் பெங்கின் விஜயத்தின் முக்கிய நோக்கம் என்ன என்று ஊடகவியலாளரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசும் இந்த விடயத்தில் எந்த வெளிப்படைத்தன்மையுடனும் நடந்துகொள்ளவில்லை. என்ன காரணத்துக்காக இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது, இதன் விளைவுகள் என்ன என்பது பற்றிய எந்தத் தகவல்களும் வெளியிடப் பட வில்லை. ஆயினும் இந்த விஜயத்தால் எமது நீண்ட கால நட்பு நாடான இந்தியாவும் மேற்கு நாடுகளும் அதிருப்தியில் இருப்பதை உணர முடிகிறது.

சீனா, உலகின் வலிமையான இராணுவத்தை கொண்டுள்ள நாடுகளில் முதலிடத்திலும், உலகில் மிகப்பெரிய இராணுவ பட்ஜெட்டை கொண்டுள்ள நாடுகளில் இரண்டாவது இடத்திலும் உள்ளது. சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் என்பவர் அமெரிக்க, ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர்கள் தரத்தில் இருப்பவர். இவ்வாறான உயர் மட்ட இராஜதந்திரிகள் சாதாரணாமாக எந்த நாட்டுக்கும் விஜயம் செய்வதில்லை. எனவே இவரது இலங்கைக்கான விஜயம் மிக மிக முக்கியமான ஒரு காரணத்தை கொண்டுள்ளது. எதிர் வரும் நாள்கள் இதை இன்னும் தெளிவாக எமக்கு எடுத்துக் காட்டும் என்று நான் நம்புகின்றேன் என்றார்.

# தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பெண்களுக்கு 30 வீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்

## உழைக்கும் மகளிர் அமைப்பின் இயக்குநர் மிதுலைச்செல்வி கோரிக்கை



தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பெண்களுக்கு 30 வீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என உழைக்கும் மகளிர் அமைப்பின் இயக்குநர் மிதுலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் கோரியுள்ளார்.

உழைக்கும் மகளிர் அமைப்பின் இன்றைய மே தின ஒன்று கூடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கோரிக்கை விடுத்தார்.

பெண்கள் அனைவரையும் ஒன்றிணைத்து சமூக பொருளாதார ரீதியாக முன்னேற வைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.மே தினமாகிய இன்றைய தினம் நாம் ஒரு பெரிய நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தோம். அதனை தற்போது நிறுத்தி இருக்கின்றோம். எனினும் இன்றைய தினம் ஒரு சிறிய ஒன்றுகூடலை நடத்தினோம்.

அதில் அரசியலில் பெண்களுக்கு 30 வீதமான இட ஒதுக்கீடு மாகாண சபை மற்றும் நாடாளுமன்றத்திலும் வழங்கப்பட வேண்டும். இம்முறை தமிழ் பெண்கள் எவரும் நாடாளுமன்றம் செல்லவில்லை. ஆனால் பெரும்பான்மை கட்சிகளில் பெண்கள் பலர் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்று இருக்கின்றார்கள்.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்த வரைக்கும் பெண்களில் ஒருவரும் நாடாளுமன்றம் செல்லவில்லை. என்பது குற்றச்சாட்டாக காணப்படுகின்றது.

யுத்த காலத்தில் இருந்து பெண்களாகிய நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறோம். எனவே பெண்கள் எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாமே நாடாளுமன்றம் மற்றும் ஏனைய சபைகளுக்கு செல்வதன் மூலம் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள முடியும்.

எனவே எம்மைப் போன்ற பெண்களை நாடாளுமன்த்திற்கு அனுப்புவதன் மூலம் தங்களுடைய பிரச்சினைகளை தாங்களே தீர்த்துக் கொள்வார்கள். எனினும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் பாதிக் கப்பட்ட பெண்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டு கையேந்தி நிற்கும் நிலை காணப்படுகின்றது. பலர் கடனாளிகளாக இருக்கின்ற நிலை காணப்படுவதோடு பலர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றதோடு, சமூக மட்டத்தில் பல பாதிப்புக்களை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

எனவே அவ்வாறான பெண்களின் வாழ்வாதாரத்தை வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே நாங்கள் எமது அமைப்பின் மூலம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம் என தெரிவித்தார்.

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரை வீழ்த்தியது பஞ்சாப்!



ஐ.பி.எல். 2021 தொடரின் 26 ஆவது லீக் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியை வெற்றி கொண்டது.

அஹமதாபாத்தில் நேற்று இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்டுக் களமிறங்கிய பஞ்சாப் அணி, 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. கிறிஸ் கெய்ல் 46 ஓட்டங்களையும் அணித்தலைவர் கே.எல்.ராகுல் ஆட்டமிழக்காது 91 ஓட்டங்களையும் எடுத்தனர். பெங்களூர் அணியின் ஜேமிசன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலளித்து, 180 ஓட்டங்கள் என்ற வெற்றி என்ற இலக்குடன் களமிங்கிய பெங்களூர் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 145 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. விராட் கோலி 35 ஓட்டங்களையும், ரஜத் பட்டித்தார், ஹர்ஷல் படேல் இருவரும் தலா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பஞ்சாப் அணியின் இளம் சுழல் பந்து வீச்சாளர் ஹர்ப்ரீத் பிரார் முக்கியமான மூன்று விக்கெட்டுக்களை அடுத்தடுத்துக் கைப்பற்றி அசத்தியிருந்தார். போட்டியின் ஆட்ட நாயகனாக அவரே தெரிவானார்.

## ஒலிம்பிக்கிற்கு ரசிகர்களுக்கு அனுமதி இல்லை!



கொரோனா அச்சம் காரணமாக ஜப்பானில் 2020 ஆம் ஆண்டு நடக்க வேண்டிய ஒலிம்பிக் தொடர் இந்த ஆண்டு ஜீலை மாதத்துக்கு பிற்போடப்பட்டது.

இப்போதும் ஜப்பானில் மட்டுமன்றி உலகம் முழுவதும் கொரோனா பரவல் தீவிரமாக உள்ளதால் இந்த ஆண்டும் ஒலிம்பிக் நடக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் ஜப்பான் ஒலிம்பிக் குழுவின் தலைவர் செய்கோ ஹஷிமோடோ ‘இப்போது நிலவும் சூழ்நிலை காரணமாக, வீரர்கள், உள்ளூர் மக்களின் நலன் கருதி முழுக்க முழுக்க ரசிகர்கள் இல்லாமல் ஒலிம்பிக் போட்டியை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்’ - என்று கூறியுள்ளார்.

## சன் ரைஸர்ஸ் அணித்தலைவர் பதவி மாற்றம் வோர்னர் நீக்கம் - கேன் வில்லியம்சன் நியமனம்!



ஐ.பி.எல். தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் கப்டன் பதவியில் இருந்து டேவிட் வோர்னர் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக புதிய கப்டனாக கேன் வில்லியம்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். 2021 தொடரில் பல அதிரடி வீரர்களைக் கொண்டுள்ள ஹைதராபாத் அணி, விளையாடிய ஆறு போட்டிகளில் ஒரே ஒரு போட்டியில் மட்டும் வெற்றிபெற்றுள்ளது. புள்ளிப் பட்டியலில் இந்த அணி கடைசி இடத்தில் உள்ளது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் வோர்னரின் மெதுவான துடுப்பாட்டமே தோல்விக்கு காரணம் என்றும், அவருக்குப் பதிலாக கேன் வில்லியம்சனுக்கு கப்டன் பொறுப்பை கொடுக்கலாம் என்றும் பல விமர்சகர்களும் கருத்துத் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையிலேயே, சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் கப்டன் மாற்றப்பட்டுள்ளார். நாளை ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டி முதல் வில்லியம்சன் கப்டனாக விளையாடவுள்ளார். இதனை ஹைதராபாத் அணி தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

டேவிட் வோர்னர் மீது மிகுந்த மரியாதை உள்ளதாகவும் அவர் வரும் போட்டிகளிலும் அணிக்கு உறுதுணையாக இருப்பார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு எதிரான நாளைய ஆட்டத்தில் வெளிநாட்டு வீரர்கள் தேர்வில் மாற்றங்கள் இருக்கும் என்றும் அணி நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

## மட்ரிட் மகளிர் ஓபின் டென்னிஸ் தொடர் இரண்டாவது சுற்றில் ஓசாகா, சபாலங்கா

மட்ரிட் மகளிர் ஓபின் டென்னிஸ் போட்டித் தொடரின் ஒற்றையர் பிரிவு 2 ஆவது சுற்றில் விளையாட ஜப்பானின் ஓசாகா, பெலாரசின் சபாலங்கா இருவரும் தகுதி பெறுள்ளனர்.

ஸ்பெயினில் ‘மட்ரிட் மகளிர் ஓபின்’ டென்னிஸ் போட்டித் தொடரில் இப்போது ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் ஆட்டம் ஒன்றில் உலகளவில் 7 ஆவது நிலையிலுள்ள பெலாரஸ் வீராங்கனை அரினா சபாலங்கா, 37 ஆவது இடத்திலுள்ள ரஷ்ய வீராங்கனை வேரா ஜவோனாரேவா இருவரும் விளையாடினர். சுமார் ஒரு மணித்தியாலம் 6 நிமிடங்கள் நடந்த ஆட்டத்தில் சபாலங்கா 6-1, 6-2 என நேர் செட்களில் வென்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.



மற்றொரு ஆட்டத்தில் உலகத்தர வரிசையில் 19 ஆவது இடத்திலுள்ள கிரீஸ் வீராங்கனை மரியா சாக்கரியுடன் 38 ஆம் நிலையிலுள்ள அமெரிக்க வீராங்கனை அமண்டா அனிசிமோவா மோதியிருந்தார். முதல் செட்டில் மரியாவை ஒரு புள்ளி கூட எடுக்க விடாமல் அசத்தலாக விளையாடிய அமண்டா, செட்டை 6 - 0 என்ற கணக்கில் கைப்பற்றினார். அதனால் சுதாரித்துக் கொண்ட மரியா அடுத்த இரு செட்களையும் 6-1, 6-4 என்ற கணக்கில் வசப்படுத்தினார். ஒரு மணித்தியாலம் 49 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் 2-1 என்ற செட் கணக்கில் வென்ற மரியா 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். தொடர்ந்து நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உலகின் இரண்டாம் நிலையிலுள்ள ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா, சக நாட்டு வீராங்கனை மிசாகி டோயை எதிர்கொண்டார். அதில் 7-5, 6-2 என நேர் செட்களில் போராடி வென்ற ஒசாகா 2 ஆவது சுற்றுக்குள் நுழைந்தார். இந்த ஆட்டம் ஒரு மணித்தியாலம் 27 நிமிடங்கள் வரை நடந்தமை குறிப்பிடத்தக்கது.

## அஸ்வினின் குடும்ப உறுப்பினர்கள் 10 பேருக்கு கொரோனா பாதிப்பு!



இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் அஸ்வினின் குடும்பத்தைச் சேர்ந்த 10 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என அவரது மனைவி பிரீத்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ‘எங்கள் குடும்பத்தில் பெரியவர்கள் 6 பேருக்கும், சிறியவர்கள் 4 பேருக்கும் கொரோனாப் பாதிப்பு உறுதி செய்யப் பட்டுள்ளது. 5 முதல் 8 நாள்கள் மிகவும் மோசமாக இருந்தன. கொரோனா நோய் மிகவும் தனிமையை உணர வைக்கக்கூடிய ஒன்றாகும். அனைவரும் தடுப்பூசி எடுத்துக் கொள்வது சிறந்தது’ எனக் குறிப்பிட்டுள்ளார். இப்போது குடும்பத்தினர் பாதிப்பிலிருந்து மெல்ல மீண்டுவருகின்றார் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தற்போது இடம்பெற்று வரும் ஐ.பி.எல். போட்டிகளில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி சார்பில் விளையாடி வந்த அஸ்வின், இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் தொடரில் இருந்து விலகினார்.

கொரோனா வைரஸிற்கு எதிராக தன்னுடைய குடும்பத்தார் போராடி வரும் நிலையில் அவர்களுடன் இருப்பது அவசியம் என்பதால் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகுகிறேன் என அஸ்வின் குறிப்பிட்டிருந்தார்.

‘நிலைமைகள் சீரானால் அணிக்குத் திரும்புவேன்’ என்றும் அவர் தனது டுவிட்டரில் பதிவிட்டிருந்தார்.

## ஐ.பி.எல். 2021 இன்றைய போட்டி

ஐ.பி.எல். 2021 தொடரின் இன்றைய போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதவுள்ளன. டெல்லியில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சு வழங்கிய சில தகவல்கள் பொய்யானவை

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

சுகாதார அமைச்சு வழங்கிய சில தகவல்கள் பொய்யானவை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சுகாதார அமைச்சால் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட சில தகவல்கள் பொய்யானவை என்பது நிரூபணமாகியுள்ளது என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. கொவிட் நோய்த்தொற்று தொடர்பில் மக்கள் மீது குற்றம் சுமத்தாது, அரசாங்கத்துக்கும் சுகாதார அமைச்சுக்கும் சில முக்கிய பொறுப்புக்கள் காணப்படுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளது.

நோய்த் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக எவ்வாறு வைத்தியசாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன? எத்தனை புதிய கட்டில்கள் ஒதுக்கப்பட்டுள்ளன? இதற்கான ஆளணி வளம் உண்டா? வெறுமனே கட்டில்கள் மட்டும் போதாது? அனைத்து விடயங்களும் யும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

உலகப் பெருந்தொற்று நிலைமைகளின் அடிப்படையில் நோய்த் தொற்றாளர்கள் குறையலாம், கூடலாம். எனினும் உலகப் பெருந் தொற்றுப் போக்கை அவதானித்து அதற்கமைய செயற்பட வேண்மெனத் தெரிவித்துள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனைகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன, நாளைக்கு எத்தனை நோயாளிகளுக்கு பரிசோதனை நடத்தப்படுகின்றது என்பது தொடர்பாக அரசாங்கத்துக்குத் தெளிவான ஒரு நிலைப்பாடு இருக்க வேண்டுமென அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

போதியளவு வைத்தியசாலை வசதி உண்டு என அரசாங்கம் குறிப்பிட்ட போதிலும், நோய்த்தொற்றாளர்கள் பலர் வைத்தியசாலையிலோ அல்லது சிகிச்சை நிலையங்களிலோ அனுமதிக்கப்படாத நிலைமையை அவதானிக்க முடிகின்றது என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# சஹ்ரான் குழுவுக்கு வெடிபொருள்கள் வழங்கியதை ஒப்புக்கொண்டார் ராசிக்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் திட்டமிட்டமை தொடர்பாக ஏராளமான தகவல்களை அறிந்த ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி சந்தேகநபர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு அங்குனுகொலபெலஸ்சவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையில் ஏராளமான தகவல்களைப் பொலிஸார் பெற்றுக்கொண்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர் காத்தான்குடியைச் சேர்ந்த ராசிக் ராசா என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். பயங்கரவாதி சஹ்ரான் ஹாஷிமின் சகோதரர் மொஹமட் ரில்வான், கடந்த 2018 இல் வெடிக்கும் சாதனமொன்றைப் பரிசோதிக்க முயன்றபோது காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் நடைபெற்றுள்ளது. மேலும் வெடிபொருள்களை யார் சோதனைக்கு கொண்டு வந்தார்கள், சோதனை எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பாகத் தெளிவாகத் தெரியவில்லை.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் கல்முனையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் முகமது ரில்வான் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு நீண்ட விசாரணைகளை நடத்தியது.

இந்த விசாரணையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் திட்டமிட்டவர்கள் யார்? வெடிக்கும் சோதனைக்கான மூலப்பொருள் வழங்கியவர்கள் யார்? உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையில் காத்தான்குடியில் வசிக்கும் 28 வயதான ராசிக் ராசா, ரில்வானுடைய பரிசோதனைக்கு உதவினார் என நீண்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. அவர் அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும், பயங்கரவாதப் பிரிவு, நீதிமன்றத்தில் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில், அவரைத் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியுள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு முன்னர் பயங்கரவாதிகள் எவ்வாறு திட்டமிட்டார்கள் என்பது பற்றி அவருக்கு நிறைய விடயங்கள் தெரியும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

எனவே அவரைப் பயங்கரவாதத் தடுப்புப்பிரினர் தொடர்ந்து தடுத்துவைத்து விரிவான விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

# றிஷாத் எம்.பி. தொடர்பாக இந்திய புலனாய்வு விசாரணை

2019, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக 2021, ஏப்ரல் 24 ஆம் திகதி இலங்கை காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் கேரள தொடர்புகளை இந்திய புலனாய்வுப் பணியகம் மற்றும் கேரள காவல் துறையினர் விசாரணை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இந்திய செய்தித்தாள் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது. கேரளாவில், பதியுதீன் கொண்டிருந்த தொடர்புகளின் விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

எனினும் 2009 ஆம் ஆண்டில் அவர் காசர்கோடு என்ற இடத்துக்குச் சென்றமை, கேரளாவில் ஒரு சில மதத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பு ஆகியன விசாரணை செய்யப்படவுள்ளன.

உளவுத்துறை அதிகாரிகளின்படி, ரிாத்தின் தந்தை காசர்கோடு பட்னாவைச் சேர்ந்தவர், அவர் குறித்த பகுதியில் ஒரு சிலருடன் தொடர்பு கொண்டிருந்தார்.

இந்தநிலையில் ஏற்கனவே, இந்தியப் புலனாய்வுப் பணியகம் மற்றும் தேசியப் புலனாய்வு அமைப்பு ஆகியவை விசாரணையில் இலங்கை அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றன,

மேலும் இலங்கையின் ஐ.எஸ்.ஐ.எஸ். தலைவர் சஹ்ரான் ஹாஷிம் மற்றும் அவரது ஆள்களுடன் தொடர்பு கொண்டமைக்காக 2019 ஜூன் மாதம் தமிழகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரியான ஹஷ்மியின் வாக்குமூலத்தையும், கைது செய்யப்பட்ட இலங்கை அரசியல் தலைவரின் தொடர்புகளை கேரள காவல்துறை ஆராயும் என்று கேரள மாநில காவல்துறைத் தலைவர் லோக்நாத் பெஹெரா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர் பதியுதீன் ஏப்ரல் 2020 இல் கைது செய்யப்பட்டார், ஆனால் ஆதாரங்கள் இல்லாதமையால் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை ஐ.எஸ்ஸில் சேருவதற்காக 2016 இல் பட்னாவிலிருந்து சிரியாவுக்கு ஐந்து இளம் முஸ்லிம் குடும்பங்கள் காணாமல் போயுள்ள விடயம் மற்றும் பதியுதீனின் காசராகோட் தொடர்பும் விரிவாக ஆராயப் படும் என்று இந்திய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் ஐந்து முஸ்லிம் குடும்பங்களும் சிரியாவுக்கு செல்லும் முன்னர் இலங்கையில் உள்ள தேசிய தவ்ஹீத் ஜமாத்திடம் மதப் பயிற்சி பெற்றன எனவும் ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்தமையும் மீண்டும் இந்தியப் புலனாய்வு பிரிவால் விசாரிக்கப்படவுள்ளன என்றும் இந்தியச் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

# சி.ஐ.டியின் சின்னத்துடன் வெளியான போலி அறிவிப்பு

## விசாரணைகள் தீவிரம்

இலங்கை குற்றவியல் புலனாய்வுத் துறையின் (சி.ஐ.டி.) கணினி குற்றப்பிரிவு சின்னத்துடன் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட போலி அறிவிப்பு தொடர்பாக விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

காவல்துறையின் சின்னத்துடன் போலி அறிக்கை சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டதாகத் தகவல் கிடைத்ததை அடுத்து முழு அளவிலான விசாரணை குற்றப்புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதுபோன்ற எந்த அறிவிப்பையும் காவல்துறை தயாரிக்கவில்லை அல்லது வெளியிடவில்லை என்று காவல்துறையின் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.




# சீன அமைச்சரின் வாகன பேரணிக்கு இடையூறு; பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார் இளைஞர்

சீன பாதுகாப்பு அமைச்சரை ஏற்றிய வாகனப் பேரணிக்கு இடையூறு ஏற்படுத்திய இளைஞர் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார். தான் மேற்கொண்ட செயலுக்கு அவர் பொலிஸாரிடம் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார். பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களிடம் பேசிய குறித்த இளைஞர் –

இந்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும், அரசாங்கம் மற்றும் பொலிஸாரிடம் மன்னிப்பு கோருகிறார் எனவும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த இளைஞருக்கு ஏதேனும் அழுத்தம் இருக்கிறதா என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, அவர் பதிலளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் இலங்கைக்கு சீனப் பாதுகாப்பு அமைச்சர் விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில், வாகனங்களில் ஒலி எழுப்பி எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

முக்கிய பிரமுகர் ஒருவரின் வருகைக்காக வீதிகள் முடக்கப்படுவதற்கு, 31 வயதான இளைஞர் ஒருவர் தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

கடந்த 27ஆம் திகதி பொரளை சந்தியில் சீனப் பாதுகாப்பு அமைச்சர் பயணித்த வாகனத் தொடரணிக்கு இவ்வாறு வாகனங்களை ஒலி எழுப்பப்பட்டு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை அந்த நபர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.05.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org